00050

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்

முன்பள்ளிக்கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் 2017/2018

**ESC2316/ EPA2816** – முன்பள்ளி கற்றல் கற்பித்தல் முறையியலும் முகாமைத்துவமும்

இறுதிப்பரீட்சை - 2018
காலம் : 03 மணித்தியாலங்கள்

திகதி: 29.12.2018 நேரம்: மு.ப 09.30 – பி.ப 12.30

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி I

01. முன்பள்ளியில் முகாமைத்துவம் என்பதால் கருதுவது யாது?

02. முன்பள்ளிப் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள் ஐந்தை (05) பட்டியலிடுக.

03. முன்பள்ளியில் பதிவேடுகள் பேணுவதிலுள்ள பயன்கள் ஐந்தை (05) சுருக்கமாக விளக்குக.

04. முன்பள்ளி ஒன்றிற்கு தேவையான நிதிவளம் என்றால் என்ன?

05. பின்வருவன தொடர்பாக ஒரு முன்பள்ளியின் இழிவளவான தேவைகளைச் சுருக்கமாக விளக்குக.
    (i) தளபாடங்களும் உபகரணங்களும்
    (ii) முன்பள்ளி ஆசிரியரின் தராதரம்

06. முன்பள்ளியில் கணிப்பீடு என்பதனால் கருதப்படுவது என்ன?

07. இலங்கையில் முன்பள்ளிக் கல்வியின் குறிக்கோள்கள் மூன்று (03) கூறுக.

08. முன்பள்ளியில் பிள்ளைகளை செயற்பாடுகட்காகக் குழுவாக்குதல் பற்றி சுருக்கமாக விளக்குக.

(8×5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. (i) முன்பள்ளியில் வகுப்பறை முகாமைத்துவம் என்றால் என்ன?
(08 புள்ளிகள்)

(ii) முன்பள்ளி ஆசிரியருக்கு வகுப்பறை முகாமைத்துவம் என்பது எவ்வகையில் உதவியாயிருக்கும் என்பதை இரண்டு (02) உதாரணங்கள் தந்து விளக்குக.
(12 புள்ளிகள்)

10. (i) முன்பள்ளி ஒன்றின் புத்தாக்க கற்றல் சூழலின் எக்காரணிகளில் கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது
(08 புள்ளிகள்)

(ii) முன்பள்ளி ஒன்றின் பௌதிக சூழலைக் காட்டக்கூடிய விளக்கப்படம் வரைக.
(12 புள்ளிகள்)

11. (i) முன்பள்ளிக் கல்வியில் பெற்றோரின் வகிபாகத்துக்கான முக்கியத்துவத்தை விபரிக்குக.
(10 புள்ளிகள்)

(ii) முன்பள்ளி ஒன்றின் நாளாந்த செயற்பாடுகளின் பொருட்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பெற்றோர் எவ்விதம் ஆதரவு வழங்கலாம் என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.
(10 புள்ளிகள்)

12. (i) முன்பள்ளி ஆசிரியை பிள்ளைகளுடன் ஒருகளச் சுற்றுலா செல்வதற்குத் திட்டமிடுகிறார். முன்பள்ளி ஆசிரியர் எனும் ரீதியில் ஒருவர் எவ்விதம் இச்சுற்றுலாவை ஒழுங்கு செய்வீர்.
(10 புள்ளிகள்)

(ii) இவ்வகை முறையினால் முன்பள்ளிப் பிள்ளைகள் பெறக்கூடிய அனுகூலங்கள் ஐந்து (05) எழுதுக.
(10 புள்ளிகள்)

13. (i) முன்பள்ளியில் பயன்படுத்தும் கணிப்பீட்டுக் கருவி யாது?
(08 புள்ளிகள்)

(ii) முன்பள்ளியில் கணிப்பீட்டுப் பதிவேடுகளின் முக்கியத்துவத்தை உதாரணங்களுடன் விபரிக்குக.
(12 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*